மலர் - 9 நவம்பர் - 1996 இதழ் - 11

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்

இடம் :- மணல் மேடு வீதி, ஈரோடு 638002
(ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு | காலை | 9.30 - 11.00 | காலை ஆராதனை |
| ஞாயிறு | பகல் | 11.00 - 12.00 | ஞாயிறு பள்ளி |
| ஞாயிறு | மாலை | 5.30 - 6.30 | திருமறை ஆய்வு & கலந்துரையாடல் |
| வியாழன் | மாலை | 7.15 - 8.30 | வேத ஆய்வு வகுப்புகள் |
| வெள்ளி | மாலை | 7.00 - 9.00 | ஜெப ஆராதனை |

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" | 1 |
| 2. | நிறைவானது வரும்போது. . . | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | அப்போஸ்தலருடைய நடபடிகள் 8—ம் அதிகாரத்தில் நாம் காணும் முத்துக்கள்! | 18 |
| 5. | வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நீ ஏன் நம்ப வேண்டும்? | 22 |
| 6. | கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மதமா? | 25 |
| 7. | கிறிஸ்துவின் சபையின் தலைமையகம் எங்கே? | 29 |
| 8. | நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்... | 30 |

# THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM - 638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 NOVEMBER - 1996 ISSUE - 11

## ஆசிரியவுரை

# "மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்"

ஒரு மொழிக்கு வளம் சேர்க்கும் வார்த்தைகள் ஏராளமாக இருப்பதைப் போன்று, பொருள் பொதிந்த வார்த்தைகளும் உண்டு. அவ்வார்த்தைகளை நாம் கூர்ந்து கவனிக்கும் போது, மிகச் சிறந்த அர்த்தங்களை அவை கொடுக்கும். அவ்வரிய வார்த்தைகளை அநேகம் பேச்சாளர்களும், எழுத்தாளர்களும் பயன்படுத்தி, கேட்போரையும், படிப்போரையும் பிரமிக்க வைப்பர். தாங்கள் சொல்ல வருவதின் உண்மை மற்றும் சிறப்பு ஆகியவைகளை வலியுறுத்துவதற்காக பெரும்பாலும் இவ்வார்த்தைகளைப் பயன்படுத்துவர்.

எடுத்துரைக்க வருவதின் மாண்பை விளக்குவதற்கு, இவ்வழகிய வார்த்தைகளில் ஒன்றே போதுமானது என்ற நிலை இருக்கும்போது, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலினாலே தன்னுடைய நிருபங்களை எழுதின பேதுரு அப்போஸ்தலன், தொடர்ந்து மூன்று வார்த்தைகளைப் பயன்படுத்தியுள்ளதை நாம் லேசில் ஒதுக்க முடியாது. பொருள் பொதிந்த இவ்வார்த்தைகளை தனது இரண்டாம் நிருபத்தில் வெளிப்படுத்தியுள்ளார். இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான

வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (II பேதுரு 1 : 4).

'முதலாவது, வாக்குத்தத்தம் என்ற வார்த்தையின் பொருள் காண்போம். ``ஒன்றைச் செய்வேன் என்று அல்லது செய்யமாட்டேன் என்று, வாய்மொழியாகவோ அல்லது எழுத்துப் பூர்வமாக செய்யும் ஓர் ஒப்பந்தமே வாக்குத்தத்தம்'' ஆகும். பிதாவாகிய தேவனை அறிந்தவர்களுக்கு வாக்குத்தத்தம் என்பது புதிதானதாகவோ அல்லது புதிரானதாகவோ இருக்காது. ஏனெனில், இரண்டு ஏற்பாடுகளிலும் வாக்குத் தத்தங்கள் மலைபோல் குவிந்துள்ளது. ஆனால், அவ்வாக்குத்தத்தங்களுக்குப் பேதுரு கொடுக்கும் அடைமொழியின் காரணமாக இங்கே அவை முக்கியத்துவம் பெறுகிறது. ஆம், அவைகளை அவர் வெறுமனே வாக்குத்தத்தங்கள் என்று சொல்லாமல், அருமையான வாக்குத்தத்தம் என்று கூட நிறுத்தாமல், மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தம் என்பதிலும் திருப்திபடாமல், இன்னும் ஒருபடி மேலே சென்று, ``மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்" என்று வர்ணிக்கிறார்.

அப்படியானால், அந்த தேவமனிதன், ஏன் இவ்வார்த்தைகளை இவ்வாறாகப் பயன்படுத்தினார் என்று ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகிறது. ஏனெனில் மகா, மேன்மை, அருமை ஆகிய இவ்வார்த்தைகளெல்லாம், எடுத்த எடுப்பில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் வார்த்தைகள் அல்ல. ஒரு கவனமான கணிப்பிற்குப் பின்னும், சரியான ஒப்பிடுதலுக்குப் பிறகும் பயன்படுத்தப்படும் அரிய வார்த்தைகள். சராசரி மனிதர்களே, இவ்வார்த்தைகளை சிந்தனைக்குப்பின் காரண காரியத்தோடு பயன்படுத்தும்போது, தேவ தயவோடு எழுதின பேதுரு அப்போஸ்தலன் பொருள் தெரியாமல் பயன்படுத்தியிருக்கமாட்டார்.

சரி, இதைச் சரியாகப் புரிந்து கொள்ள அவர் எழுதின நிருபங்களின் பின்னணியைக் கொஞ்சம் அலசுவது அவசியம். கிட்டத்தட்ட ஒரே மாதிரியான வாசகர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்களின், முதலாவதில், விசுவாசத்தினிமித்தம் பாடுகளை அனுபவித்துக் கொண்டிருந்தவர்களை ஆறுதல்படுத்த, ``நம்பிக்கை" என்ற தலைப்பிலும், அடுத்தது, கள்ளப் போதகர்களால் பலவித மனித கோட்பாடுகளுக்கு ஈர்க்கப்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கும்படி, "கர்த்தராகிய இயேசுவை அறியும் அறிவு" என்ற தலைப்பிலும் எழுதுகிறார்.

இரண்டாம் நிருபம் எழுதப்பட்ட பேதுருவின் பின் நாட்களில், கிறிஸ்தவம் ஒரு கடும் தாக்குதலுக்குள்ளான நிலையிலிருந்தது. மனிதன் தனது அறிவின் மிகுதியால், தத்துவங்களை தனக்குத்தானே ஏற்படுத்தி, அவைகளின் அடிப்படையில் மார்க்க சித்தாந்தங்களை வகுத்துக் கொண்டான். ``மார்க்க காரியங்கள்" என்ற போர்வையின் மறைவில், மனிதனின் உள் உணர்வுகளுக்கும், சரீர உணர்ச்சிகளுக்கும் தீனிபோடக் கூடிய கொள்கைகள் பரப்பப்பட்டது. சாரமில்லாத அக்கொள்கைகளைக் கொண்டு, சற்றும் சாத்தியமில்லாத வாக்குத்தத்தங்களும் வாரி வழங்கப்பட்டது.

இப்படிப்பட் ஓர் அவலச் சூழலில் தான் பேதுரு தனது இரண்டாம் நிருபத்தை எழுதினார். அதில் தான் நம்முடைய சிந்தனைக்கான வார்த்தைகள் வடிக்கப்பட்டுள்ளது. மனிதனின் அறிவு குறைவானது என்றும், அவை கொடுக்கும் வாக்குத்தத்தங்கள் பொய்யானது என்றும் காட்ட முற்படுகிறார். நாளை என்ன நடக்குமென்று தெரியாத மனிதன் தனது சூது மதியால் கொடுக்கும் வாக்குத்தத்தங்கள், முக்காலங்களையும், அறிந்த அநந்த ஞானமுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங்களோடு ஒப்பிடுவதற்கு லாயக்கற்றவைகள் என்று திடமாக வாதிடுகிறார். ஒருவேளை ஒப்பிட விரும்பினால், அவைகளைக் காட்டிலும் தேவனுடைய வாக்குத்தத்தங்கள், ``மகா மேன்மையும் அருமையுமானது'' என்று மிகத் தெளிவாக, ஆணித்தரமாக எடுத்துக் கூறுகிறார்.

பேதுரு அப்போஸ்தலன் அப்படிச் சொல்வதற்குப் பலமான காரணங்கள் பல உண்டு. அவைகளில் ஒருசிலவற்றை இங்கே காண்போம்.

## I. இரட்சிப்பின் நம்பிக்கை

மனிதன் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட மிகச் சிறப்பான ஈவுகளில் தலையாயது இரட்சிப்பு தான். மனிதன் படைக்கப்பட்டபொழுது செம்மை யானவனாகவே படைக்கப்பட்டான். அவன் தேவசாயலிலே படைக்கப்பட்டான் என்றே வசனம் கூறுகிறது. (ஆதி. 1 : 26) அதாவது, பாவம் இல்லாத ஒரு நிலையோடு. ஆனால் பாவத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சிக்குப்பின் அவன் பாடு பரிதாபமான ஒன்றாக மாறியது. தேவனோடு இருந்தவன், தேவனற்றவனாகவும், முற்றிலும் இழந்து போனவனாகவும் காணப்பட்டான். இனி மீட்பு என்பதே சாத்தியமில்லாத ஒன்று எனக் கருதப்பட்டது. தேவனுக்கும், மனிதனுக்கும் ஒரு போதும் ஒட்டும் இல்லை உறவும் இல்லை என்றே தீர்மானிக்கப்பட்டது.

இச்சமயத்தில் தான், பாவியான மனிதனுக்கு இரட்சிப்பைக் கொடுக்கும் ஓர் அற்புதத் திட்டம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டது. இதுகுறித்து அப்போஸ்தலன் பவுல் தீத்துவுக்கு எழுதும்போது இப்படியாகக் குறிப்பிடுகிறார். "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி..." என்று (தீத். 2:11). மனிதனுக்காகத் தீட்டப்பட்ட இந்தத் திட்டம் மிகவும் ஆச்சரியமான ஒன்றாக இருந்தது என்பதற்கு ஆதாரமாக பேதுருவின் வேறொரு வசனத்தை நாம் குறிப்பிட முடியும். தேவக் கிருபையால் கிடைத்த இரட்சிப்பின் நற்செய்தியை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள் என்று. (I பேது. 1 : 10-12).

இம்மாபெரும் இரட்சிப்பின் நம்பிக்கை மனிதனுக்கு கிருபையாகக் கிடைத்தது என்றால், கிருபை என்பது யாது? "சற்றும் தகுதியில்லாத நிலையில் ஒன்றைப் பெற்றுக் கொள்வது தான்" கிருபையாகும். இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள மனிதன் எவ்விதத்திலும் லாயக்கற்றவனாக இருந்த போது தான், தேவன் இக்கிருபையைப் பொழிந்தருளினார். அதுவும் எப்படி எளிய நிபந்தனைகளைக் கொண்டு இந்த இரட்சிப்பின் நம்பிக்கையை வாக்குத்தத்தமாக அருளும் வசனங்கள் நிறைய உண்டு. அவைகளில், ஒன்றைக் கவனியுங்கள். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்..." (மாற். 16 : 16) என்பதே.

மகா மேன்மையும் அருமையுமான வாக்குத் தத்தமாகிய `ரட்சிப்பின் நம்பிக்கையை நீங்கள் பெற்றுவிட்டீர்களா?

## II. உங்களுடனே கூட இருக்கிறேன்

அவர் கொடுக்கும் இரட்சிப்பின் வாக்கை நம்பி, ஏற்றுக் கொள்கிறவர்களுக்கு, கொடுக்கப்படும் அடுத்த வாக்குத்தத்தம், ``நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்பதாகும்.

நமதாண்டவராகிய இயேசுக் கிறிஸ்து, இப்பூவுலகில் நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்து ஊழியம் செய்த நாட்களில், வாக்குத்தத்தமாகக் கொடுத்த ஒரு வசனத்தை உங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். ``ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்றார். (மத். 18 : 20). மீண்டும் மரித்து உயிர்த்தபின், தன்னுடைய சீடர்களுக்கு பிரதான கட்டளையைக் கொடுத்துவிட்டு, அத்தோடு ஒரு வாக்குத்தத்தையும் சேர்த்துக்

கொடுத்தார். "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார். (மத். 28 : 20)

மேற்சொன்ன இரண்டு வசனங்களையும் நாம் ஊன்றிக் கவனித்தால், இவ்வாக்குத்தத்தத்தில் அடங்கியுள்ள ஓர் உண்மை புலப்படும். அங்கே இருப்பேன் என்று கூடச் சொல்லாமல், இருக்கிறேன் என்றே கூறுகிறார். எவ்வளவு அருமையான வாக்குத்தத்தம் பார்த்தீர்களா?

வாக்குமாறாத இந்த தேவன் உங்கள் நடுவில் இருக்கிறாரா? உங்களுடனே கூட இருக்கிறாரா? இரட்சிப்பின் நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டவர்களுக்குத் தான் இந்த வாக்குகள் பொருந்தும் என்பது நினைவில் இருக்கட்டும். ஏமாறவோ, ஏமாற்றப்படவோ வேண்டாம்.

## III. *கிறிஸ்துவின் சபை நிலைத்து நிற்கும்*

``இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார்" என்று அப்போஸ்தலர் நடபடிகளில் காண்கிறோம் (அப். 2:47).

புதிய ஏற்பாடு, சபையைப் பற்றிச் சொல்லும் போதெல்லாம் ஒருமையிலே தான் சொல்கிறது. அப்படியானால் "சபை" என்பது வேதவசனங்களின்படி ஒன்றே ஒன்று தான். அந்த "ஒரு சபையிலே" தான் இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சேர்த்துக் கொண்டு வந்தார். அந்த ஒரு சபையை அடையாளம் கண்டு கொள்ள முடியாமல் கிறிஸ்தவ சமுதாயம் தடுமாறிக் கொண்டுள்ளது. ஐந்து குருடர்கள் யானையின் ஒவ்வொரு உறுப்பைத் தொட்டுப் பார்த்துவிட்டு, ஒட்டுமொத்த யானையே அந்த உறுப்பைப் போன்றுதான் இருக்கிறது என்று சாதித்ததைப்போல சாதித்துக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட வேத புரட்டர்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் தீமோத்தேயுவுக்கு எப்படி எழுதுகிறார் பாருங்கள். ".... தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப் பிரமாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள். (I தீமுத். 1:7)

புதிய ஏற்பாட்டில் "சபை" என்ற வார்த்தை, முதன் முதலாக மத். 16 : 18-ல் இடம் பெற்றுள்ளது. அங்கே, இயேசுக் கிறிஸ்து, வாக்குக் கொடுத்த போது, ``...என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றே சொன்னார். ``என் சபைகளை" என்று அவர்

சொல்லவேயில்லை. கிறிஸ்து, என் சபை என்று சொல்லும்போது, அதைக் ``கிறிஸ்துவின் சபை" என்றழைப்பது தானே நியாயமானது. அது மாத்திரமல்ல கிறிஸ்துதான் சபைக்காக இரத்தம் சிந்தினார் (அப். 20 : 28) அவர்தான் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் (அப். 2 : 41) மேலும், அவர்தான் சபைக்குத் தலைவராயிருக்கிறார். (எபே. 5 : 23). இன்னும், கிறிஸ்து மறுபடியும் வருவதே சபைக்காகத் தான் (எபே. 5 : 27). கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இவ்வளவு தொடர்பு இருக்கும் போது, சபையை அவர் பெயரில் அழைப்பதற்கு என்ன கஷ்டம்?

சம்பந்தமில்லாத மனிதர்கள் பெயரால், இடங்களின் பெயரால் சபை அழைக்கப்பட்டால், அது கிறிஸ்துவை கனப்படுத்துமா அல்லது கனவீனப்படுத்துமா என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள். சபை கிறிஸ்துவினுடையது என்று சொல்வதற்குக் கூட வெட்கப்படுகிறவர்கள், தன்னைக் கிறிஸ்தவன் என்றும், கிறிஸ்துவின் ஊழியன் என்றும் சொல்வது வேஷமில்லையா? கிறிஸ்துவின் பெயரைச் சொல்லிக் கொண்டே கிறிஸ்துவுக்குச் செய்யும் துரோகமில்லையா? சொல்லுங்கள்.

சரி, நான் இங்கே சொல்ல வருவது, கிறிஸ்துவின் சபை நிலைத்து நிற்கும் என்பது பற்றி. இயேசுக் கிறிஸ்து வாக்குக் கொடுக்கும் போதே ``... பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என்றார். (மத். 16 : 18) அதாவது தன்னுடைய சபையை எந்தச் சக்தியும் எதுவும் செய்துவிட முடியாது என்பதே அதன் பொருள்.

பாதாளத்தின் வாசல்கள் என்று கிறிஸ்து ஏன் சொன்னார்? கவனியுங்கள். முன் நாட்களில் பட்டணங்கள் இருந்தால், அதைச் சுற்றி உயரமான மதில்சுவர்கள் எழுப்பப்பட்டு, ஆங்காங்கே வலுவான வாசல்கள் அமைக்கப்பட்டிருக்கும். பட்டணங்களுக்கு வாயில்கள் அவசியமானது மாத்திரமல்ல, முக்கியமானதுங்கூட. எதிரிகளின் படையெடுப்பின் போது முதலில் தாக்கப்படுவது மதிற்சுவர்களல்ல, வாயில்களே. எனவே சிறப்பான படைப் பிரிவைக் கொண்டு வாயில்களைப் பாதுகாப்பர். ஆகவே, வாசல்கள் பட்டணத்தின் பலத்தையும், வல்லமையையும் பிரதிபலிக்கும் சின்னமாக விளங்கியது.

அடுத்து பாதாளம். இது மரித்தவர்கள் யாவரும் போய் சேரக் கூடிய இடமாக புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ளது. இங்கே பாதாளத்தின் வாசல்கள் என்று சொல்லும் வேதப்பகுதி, அதை ஒரு மிகப் பாதுகாப்பான

வாசலைக் கொண்ட, அரணிப்பான பட்டணத்திற்கு ஒப்பாகச் சொல்கிறது. இப்படி இயேசு ஆண்டவர் சொல்வதின் பொருள் யாதெனில், ``பாதாளமும், மரணமும் எவ்வளவு பலமானதாக இருந்தாலும், தான் சிலுவையில் மரித்து, உயிர்த்து தனது சபையைக் கட்டியே தீருவேன்'' என்பதே. பாதாளத்தின் பலமோ, மரணத்தின் வல்லமையோ தனது பணியை அணைபோட்டுத் தடுக்க முடியாது என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்கிறார்.

அவருடைய உயிர்த்தெழுதலின் மூலம் கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்படும் என்பது மாத்திரம் அங்கே வலியுறுத்தப்படும் கருத்தல்ல. அது ஸ்தாபிக்கப்பட்ட பின்பும் இந்த உலகம் அதை ஒன்றும் செய்துவிட முடியாது என்பதும் அதில் அடக்கம். ஆம், கிறிஸ்துவின் சபையிடம், தேவன் ஒப்புவித்த பணியைச் செய்து முடிக்கும் வரை பாதாளமோ, மரணமோ, சாம்ராஜ்யங்களோ, இராஜாக்களோ, அவர்களின் அடக்குமுறைகளோ, அதிகாரங்களோ, பிற மதங்களோ, அவைகளின் வெறியர்களோ, கள்ளப் போதகர்களோ, அவர்களின் பொய் உபதேசங்களோ, வேத புரட்டர்களோ, அருளாட்சி என்ற பெயரால் அரசாட்சி நடத்திக் கொண்டிருக்கும் மதத் தலைவர்களோ, அவர்களின் பின் அணிவகுத்து நிற்கும் கூட்டங்களோ, உண்மைச் சத்தியத்தை ஏற்றுக் கொண்டு மறுதலிக்கும் துரோகிகளோ, ``கிறிஸ்துவின் சபையை'' ஒன்றும் செய்ய முடியாது, முடியாது முடியவே முடியாது.

கிறிஸ்துவின் சபையாகிய இராஜ்யம் அசைக்கப்பட முடியாதது என்பதை எபிரேய ஆசிரியர் எப்படி எழுதுகிறார் பாருங்கள். ``ஆதலால் அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக் கடவோம். (எபி. 12 : 28).

நீங்கள், எப்படிப்பட்ட ஒரு சபையில் அங்கம் வகிக்கிறீர்கள்? நிலைத்திருக்கக் கூடிய ஒன்றா? அசைக்கப்பட முடியாததா? உங்கள் நிலையைக் கொஞ்சம் சீர்தூக்கிப் பாருங்கள்.

பிரியமானவர்களே! சகோதரரே! பேதுரு அப்போஸ்தலன் தேவனுடைய வாக்குத்தத்தங்களை ``மகா மேன்மையும் அருமையுமானவை'' என்று போகிற போக்கில் சொல்லவில்லை. நேர்மையான ஒப்பிடுதலுக்குப் பின்னே சொல்லியிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் அந்த வாக்குத்தத்தங்களின் மீது நம்பிக்கை வைக்க வேண்டுமென்றே சொல்லியுள்ளார். அவைகளின் நன்மையை நாம் அனுபவிக்க வேண்டுமென்றே சொல்லியுள்ளார்.

இவைகளைப் பெறுவதற்கு அவர் கொடுக்கும் ஆலோசனை என்ன தெரியுமா? ``தேவனையும், கர்த்தராகிய இயேசுவையும் அறிய வேண்டும்" (II பேதுரு 1 : 2). சிறந்த அப்போஸ்தலனாகிய பேதுருவின் ஆலோசனையை ஏற்றுக் கொள்வீர்களா? தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். இரட்சிப்பின் நம்பிக்கையைப் பெறுங்கள். கிறிஸ்து உங்களோடு இருக்க அனுமதி கொடுங்கள். நிலைத்திருக்கும் சபையாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாகுங்கள். கிறிஸ்துவுக்குள் வாழுங்கள்! வாடாத ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்!!

**EZS. ராஜநாயகம்.**

## ஓர் தகப்பனின் அனுபவ ரீதியான அறிவுரை

*என் மகனே, என் போதகத்தை மறவாதே; உன் இருதயம் என் கட்டளைகளைக் காக்கக் கடவது.*

*அவைகள் உனக்கு நீடித்த நாட்களையும் தீர்க்காயுசையும்; சமாதானத்தையும் பெருகப் பண்ணும்.*

*கிருபையும் சத்தியமும் உன்னைவிட்டு விலகாதிருப்பதாக, நீ அவைகளை உன் கழுத்திலே பூண்டு அவைகளை உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்.*

*அதனாலே தேவனுடைய பார்வையிலும், மனுஷருடைய பார்வையிலும் தயையும், நற்புத்தியையும் பெறுவாய்.*

*உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தர் மேல் நம்பிக்கையாயிருந்து உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக் கொள் அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப் படுத்துவார்.*

*நீ உன்னை ஞானியென்று எண்ணாதே, கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு.*

*அது உன் நாபிக்கு ஆரோக்கியமும், உன் எலும்புகளுக்கு ஊனுமாகும்.*

*உன் பொருளாலும், உன் எல்லா விளைவின் முதற் பலனாலும் கர்த்தரை கனம் பண்ணு.*

*அப்பொழுது உன் களஞ்சியங்களை பூரணமாய் நிரம்பும் உன் ஆலைகளில் திராட்சை ரசம் புரண்டோடும்.*

நீதி : 3:1–12

# நிறைவானது வரும்போது...

பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும் தொடரின் இறுதிக் கட்டத்திற்கு நாம் வந்துள்ளோம். “நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போகும்” என அப்போஸ்தலர் பவுல் கூறிய வார்த்தைகளை விட இந்தக் கடைசி பாடத்திற்கு மிகவும் ஏற்ற தலைப்பு வேறு எதுவாக இருக்க முடியும்? அவருடைய கூற்றுப்படி, நிறைவானது ஒன்று வரவும், குறைவாக அதுவரை இருந்து வந்த ஒன்று முடிந்து போகவும் வேண்டியதாக இருந்தது. இந்த அறிவிப்பில் அவர் குறிப்பிடும் நிறைவானது எது? மேலும், குறைவானது என அவர் குறிப்பிடும் போது எதைப் பற்றி அவர் சொல்லிக் கொண்டிருந்தார்? இவற்றையே அடுத்த சில வினாடிகளில் நாம் படிக்கப் போகிறோம்.

தவறு ஏதும் ஏற்பட்டு விடாதபடி, சத்தியம் மட்டுமே போதிக்கப்பட வேண்டி, அப்போஸ்தலர்களை அற்புதமாக வழி நடத்த, தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியை கிறிஸ்து அனுப்புவதைப்பற்றி மீண்டும் மீண்டுமாக நாம் கூறியிருக்கிறோம். அந்தப்படியே, அப்போஸ்தலர்களும், தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்த பெரிய பணியில் உதவியாக இருக்கத்தக்கதாக, மேலுமாக சில குறிப்பிட்ட சீடர்களின் மேல் தங்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் கொடுக்கத் தேர்ந்தெடுத்தனர். தேவனால் அவர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவும், அவர்கள் போதித்த வசனங்களை உறுதிப்படுத்தவும், போதிக்கப்பட்டவர்களிலிருந்து விசுவாசிகளை உண்டாக்கவும் அவை அனைத்தும் நடைபெற்றன. இறுதியாக புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்ட போது, இந்த அற்புத யுகம் ஓய்ந்து போயிற்று. அன்றிலிருந்து இன்றுவரை, தேவனையும் அவருடைய விருப்பத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியவர்கள் அந்தச் செய்திக்காக புதிய ஏற்பாட்டுக்குச் செல்ல வேண்டியவர்களாக இருக்கின்றனர். விசுவாசம் இன்று தேவனுடைய வசனத்தைக் கேட்பதால் வருகிறது என்று பவுல் நமக்குச் சொல்லுகிறார். (ரோமர் 10 : 17). எனவே, நற்செய்தியானது உலக முழுவதும் எடுத்துச் செல்லப்பட வேண்டுமென கிறிஸ்து கட்டளையிட்டார். (மாற்கு 16 : 15)

நாம் இப்போது 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்திற்குத் திருப்பிக் கொண்டு, அந்த பிரசித்தி பெற்ற வசனப் பகுதியைப் படித்து, தேவனுடைய பூரணமான சட்டம் வருவதைப் பற்றியும், எனவே இனி அற்புதங்களுக்கு தேவை எதுவும்

இல்லை என்பது பற்றியும் பவுல் என்ன கூறியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம். அவர் சொல்லுவதைக் கேளுங்கள் : "நான் மனிதர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.' சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்து போம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம், அறிவானாலும் ஒழிந்துபோம். நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். நான் குழந்தையாயிருந்த போது குழந்தையைப் போலப் பேசினேன். குழந்தையைப் போல சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன். இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிற படியே அறிந்து கொள்வேன். இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது". 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் முழுவதையும் இப்போது படித்தோம்.

இந்த அதிகாரமானது அடிப்படையில் அன்பிற்கும், குறிப்பாது அதன் இறுதிப் பகுதியில் காண்பது போல "இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரிது" என்றும் அன்பிற்கு முக்கியத்துவம் தரக்கூடியதாக அறியப்பட்ட போதிலும், இன்னும் நாம் தனிக்கவனம் செலுத்த வேண்டிய மற்றும் சில அறிவிப்புகளும் உள்ளன.

பவுல் சொல்லுவதை தயவு செய்து கவனியுங்கள்: "....அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்து போம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம்; அறிவானாலும் ஒழிந்து போகும்". அற்புத யுகத்தில் பவுல் வாழ்ந்தார். அவர் ஒரு அப்போஸ்தலராக இருந்தபடியால் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருந்தார். இது இப்படி இருப்பதால், அந்நிய பாஷைகளில் பேசுவது போன்ற பிற பல அற்புதச் செயல்களை அவர் செய்யக் கூடியவராக இருந்தார். ஆனால், அற்புதமாக தீர்க்கதரிசனம் சொல்லுவதும், அந்நிய பாஷைகள் பேசுவதும், அறிவும் ஒழிந்து போகுமென்றும், அன்பு ஒருபோதும் ஒழியாது என்றும் அவர் சொன்னார். வேறுவிதமாகச் சொன்னால், இயற்கை வழியில் காரியங்கள் நடப்பது தொடரும், ஆனால் அற்புத வகையில் நடைபெற்ற காரியங்கள் ஓய்ந்து போகும்.

பவுல் தொடர்ந்து, "நமது அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது" என்கிறார். மீண்டும் அற்புத அறிவைப் பற்றியும் தீர்க்க தரிசனம் உரைத்தலைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். அவை குறைவானது என்று அவர் சொல்லுகிறார். அதாவது, அவை தற்காலிகமாகி, கொஞ்ச காலத்திற்கு மட்டுமே இருக்கும், ஒரு கட்டிடம் கட்டப்படும் போது மூங்கில்களைக் கொண்டு சாரம் அமைப்பது போல. சபை சமீபத்தில் தான் நிறுவப்பட்டிருந்தது; அது வளர்ந்து கொண்டிருந்தது. அதை வழி நடத்த புதிய ஏற்பாடு பூர்த்தி செய்யப்பட்ட நிலையில் இல்லை. எனவே, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட வடிவில் கொடுக்கப்படும் வரையில், இந்த உதவியைச் செய்ய அற்புதங்களின் ஆதரவு தேவையாக இருந்தது.

பின்னர், பவுல் அறிவிக்கிறார் : "நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்து போம்". குறைவானது என்று அவர் வர்ணிக்கும் அந்தக் காரியங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே, அதாவது பூரணமான விடுதலைச் சட்டம் வரும் வரையில் கொடுக்கப்பட்ட அற்புதச் செயல்களே ஆகும். கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் இப்படிக் குறிப்பிடுவதாக சிலர் இதற்கு விளக்கம் அளிக்க முயலுவர். ஆனால் அப்படியிருந்தால், அந்த சமயத்தில் இந்த எல்லா காரியங்கலும் ஒழிந்து போகும் என மிக அழுத்தமாகக் கூறக் காரணம் என்ன? கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அது குறிப்பிட்டிருந்தால், அந்த சமயத்தில் இவை அனைத்தும் முடிவுக்கு வந்திருக்கும் என்பது தெளிவு. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் கிறிஸ்துவின் வருகையைப் பற்றி அவர் பேசிக் கொண்டிருக்கவில்லை. ஆனால் மாறாக, புதிய ஏற்பாடு வருவதையே அவர் குறிப்பிட்டுக் கொண்டிருந்தார். பூரண விடுதலைச் சட்டமாகிய புதிய ஏற்பாடு

வரும் போது, இந்த அற்புதக் காரியங்கள் அனைத்தும் இனி தேவைப்படாது என்பதால் அவை ஒரு முடிவுக்கு வரும் என்றுதான் அவர் சொல்லிக் கொண்டிருந்தார். யாக்கோபு இதை ஆதரித்துக் கூறும்போது, "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" என்றார். (யாக். 1 : 25).

பின்னர் பவுல் விளக்கிச் சொல்லும் போது, "நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப் போலப் பேசினேன், குழந்தையைப் போலச் சிந்தித்தேன், குழந்தையைப் போல யோசித்தேன்; நான் புருஷனான போதோ குழந்தைக் கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்," என்கிறார்.

மீண்டுமாக இந்தக் கருத்தை அவர் விளக்கிக் கூறுகையில், "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நாள் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன்", என்கிறார். அந்த அற்புத யுகத்திலே கண்ணாடியில் நிழலாட்டமாகப் பார்க்கிறதைப் போல, அதாவது, ஒருவனுடைய முகத்தை மிகவும் தெளிவாகிக் காண முடியாதது போல, பார்க்கிறோம் என அவர் கூறுகிறார். ஆனால், நாள் வரும் போது புதிய ஏற்பாட்டின் வழியாக நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளுவேன் என அவர் சொன்னார். யாக்கோபு 1 : 22 - 25 வசனங்களில், இதையே தான் யாக்கோபும் சொல்லுகிறார். அந்த சமயத்திலே, தான் குறைவாக அறிந்து கொண்டதாகவும், காலம் வரும்போது சகலரும் தேவனுடைய விருப் பத்தை முழுவதுமாக அறிந்து கொள்ளுவார்கள் என்று பின்னர் அவர் கூறினார்.

எனது நண்பர்களே! புதிய ஏற்பாட்டின் வருகையோடு அற்புத யுகமும் முடிவுற்றது. தமது கட்டளையை தேவன் முற்றிலுமாக வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருவன் தேவனுடைய கட்டளையை அறிய விரும்பினால், புதிய ஏற்பாட்டிற்குச் செல்ல வேண்டும். அவருடைய கட்டளைகளை விடுத்து, தனியாக இன்று யாரிடமும் தேவன் பேசிக் கொண்டிருக்கவில்லை. உதாரணமாக, அற்புதங்களை தாங்கள் செய்வதாக இன்று கூறிக் கொள்ளும் நபர்கள், இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள் அனைவரும் அவர்கள் முன்னே வந்து நிற்க வேண்டுமென்றும், பாவிகளுக்கான ஜெபத்தை அவர்களோடு சேர்த்து திருப்பிச் சொல்ல வேண்டுமென்றும் அறை கூவல் விடுகின்றனர். தேவன் அவர்கள் வழியாக கிரியை செய்வதாகக் கூற இவர்களுக்கு எவ்வளவு தைரியம்

வேண்டும்? பேதுருவோ, பவுலோ அல்லது வேறு ஒரு நற்செய்தி போதகரோ, அவர்களுக்குச் செவி சாய்த்துக் கொண்டிருப்பவர்களை முன்னே வரச் சொல்லி, அவர்கள் இரட்சிப்படைய வேண்டுமானால் பாவிகளின் ஜெபத்தை அவர்களோடு சேர்த்து ஜெபிக்க வேண்டும் எனக் கூறியதாக சுவிசேஷத்தில் நீங்கள் எங்கேயாவது பார்க்க முடிகிறதா? கிறிஸ்தவன் அல்லாதவர்களுக்காக அப்படிப்பட்ட ஒரு ஜெபமே தேவனுடைய வார்த்தையில் இல்லை.

ஏமாந்து போகாதீர்கள் என உங்களை மீண்டும் கேட்டுக் கொள்ளுகிறேன். தேவனை விசுவாசியுங்கள், கிறிஸ்துவை விசுவாசியுங்கள், புதிய ஏற்பாட்டில் காணப்படும் பரிசுத்த ஆவியின் வார்த்தைகளை விசுவாசியுங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என அவர்கள் சொல்லுகிறார்களோ அவற்றைச் செய்யுங்கள், அதாவது, உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்படுங்கள். கிறிஸ்துவில் உங்கள் விசுவாசத்தை அறிக்கையிடுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப் பட திருமுழுக்குப் பெறுங்கள், கர்த்தர் உங்களை இரட்சிப்பார், பரிசுத்த ஆவியானவரைத் தருவார், அவருடைய சபையில் சேர்த்துக் கொள்ளுவார். நீங்கள் இரட்சிப்படைய வேண்டுமானால், அதைத் தானே உங்களையும் மற்ற எல்லாரையும் அவர் செய்யச் சொல்லுகிறார்.

பரிசுத்த ஆவியானவரின் பணி என்ற இந்த பாடங்கள் அனைத்தையும் என்னோடு படித்து, கற்றுக் கொண்டதற்காக உங்களுக்கு நன்றி. அவருடைய வசனத்தின் வழியாகவும், அதற்கு ஏற்றபடியும் மட்டுமே இன்று ஆவியானவர் கிரியை செய்கிறார். அற்புதமான வழியில் இன்று பரிசுத்த ஆவியானவர் மனிதரிடத்தில் கிரியை செய்யாவிட்டாலும், தேவனுடைய கட்டளைகளை தெரியப்படுத்தவும், பாவத்திலிருந்து மனிதனை இரட்சிக்கவல்ல கிறிஸ்துவை வெளிப்படுத்தவும் வசனத்தின் வழியாக அவர் கிரியை செய்கிறார். இதைவிட வேறு எந்தப் பெரிய பணியை அவர் செய்யக் கூடும்?

தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இந்தக் காரியங்களைப் பற்றி நீங்கள் சிந்திக்கும் போது இன்னும் அதிகமாகக் கற்றுக் கொள்ள, உங்களுக்கு எங்கள் உதவி தேவைப்பட்டால் உங்கள் அருகிலுள்ள கிறிஸ்துவின் சபையை தயவு செய்து அணுகுங்கள்.

**J.C. சோட்**

## பெண்கள் பகுதி

# "பாலிய ஸ்திரீ"

உலகிலே பிறந்த எல்லா மானிடமும் பல சவால்களை மேற்கொள்கின்றனர். அவற்றில் மிக சில சவால்களை பெண்களாகிய நாம் ஏற்று செயல்படக்கூடிய திறனை தேவன் நமக்கு கொடுத்திருக்கிறார்.

நம் வாழ்விற்கு தேவையான அனைத்து அறிவுரைகளையும் தேவன் நமக்கு கொடாமல் விடவில்லை. அதில் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார் என்பதை அறிவது மிகவும் அவசியமான ஒன்று. அவ்வாறு அறிந்து செயல்படும்பொழுது அவருக்கு விரோதமான செயல்களை செய்யமுடியாது. விசேஷமாக பெண்களாகிய நம்மிடம் தேவன் கொடுத்திருக்கும் பங்கு என்ன என்பதைப் பற்றிசற்று ஆராய்வோம். அவரின் உன்னதமான திட்டத்திற்கு ஏற்ப நம் வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் போதுதான் தேவனை நாம் பிரீயப்படுத்த முடியும்.

அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதின 2ம் அதிகாரம் 4,5 ஆகிய இரு வசனங்களில், "தேவ வசனம் தூஷிக்கப் படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிற வர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும் படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர் களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு என்று பார்க்கிறோம். இங்கே பாலிய ஸ்திரிகளுக்கு அத்தியாவசியமான தேவன் விரும்பும் சில குணாதிசயங்களை பரிசுத்த ஆவியானவர் பட்டியலிட்டு காட்டுகிறார். அதே அதிகாரம் முதலாம் வசனத்தில் நாம் பார்க்கும் போது", நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவைகளைப் பேசு என்றுள்ளது ஆரோக்கியமான உபதேசம் என்றால் என்ன?

1. மனிதனை இரட்சிப்பதற்காக தேவனுடைய திட்டம்

2. சபையின் அமைப்பு

3. ஆராதனையின் அம்சங்கள் ஆகிய இவைகளே,

ஆனால் தீத்து 2 : (3,4,5) ஆகிய வசனங்களில் காணப்படும் குணங்கள் இந்த ஆரோக்கியமான உபதேசத்தை அலங்கரிப்பதாக அமைந்துள்ளன. ஒரு வேளை நாம் ஆரோக்கியமான உபதேசத்தைப் பற்றி போதிக்கலாம். ஆனால் நம்முடைய வாழ்க்கை அதோடு ஒன்றித்து இராத பட்சத்தில் நாமே அவைகளை அழித்துப் போடுகிறவர்களாகவும் மாறிவிடுகிறோம்.

பாலிய ஸ்திரிகள் கற்றுக் கொள்ள வேண்டிய சில முக்கியமான குணாதிசயங்களைப் பற்றி பார்ப்போம்.

**I. *பாலிய ஸ்திரிகள் தங்கள் புருஷரிடத்தில் அன்பு கூற வேண்டும்:***

இந்த ஒரு இடத்தில் மட்டும் தான் பெண் தன் கணவனிடத்தில் அன்பு செலுத்த வேண்டும் என்று கூறப்படுகிறாள், அநேக இடங்களில் அவள் தன் கணவனுக்கு கீழ்ப்படிந்து இருக்க வேண்டும் என்றே கூறுகிறது. ஆனால் இங்கே அவன் தன் புருஷனுக்கு அன்பு செய்ய வேண்டும் என்று கூறுகிறது. இந்த வகையான அன்பு உணர்வுகளை உள்ளடக்கியதாக உள்ளது. ஓர் இதமான பாசம், ஒருவர் மேல் ஒருவர் கொண்டுள்ள இணைப்பு ஆகியவை இதில் அடங்கும். வேதாகமம் நம்முடைய சத்துருக்களிடமும் அன்பு காட்ட வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் இந்த வகையான அன்பில் ஒரு பாசமும், பிரியமும் அடங்குவதில்லை. இந்த அன்பு பெண்களாகிய நாம் தேவன் நமக்கு கொடுத்த கணவனிடம் காட்ட வேண்டியது மிக அவசியமாக உள்ளது.

**II. *பாலிய ஸ்திரிகள் தங்கள் பிள்ளைகளிடம் அன்பு செய்ய வேண்டும்:***

பெற்றோர் பிள்ளைகளிடம் அன்பு காட்டுவது என்பது விசேஷித்த ஒன்று. லூக்கா 2 : 52, "இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்", என்று பார்க்கிறோம், கிறிஸ்தவ பெற்றோர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகள் இந்த நான்கு காரியங்களிலும் தேறினவர்களாக இருக்க வேண்டுமென்ற ஒரு இலட்சியத்தோடு இருக்க வேண்டும்.

ஞானம் என்பது அறிவு, புரிந்து கொள்ளும் சக்தி, பிள்ளைகளின் வயது வளரும்போது அறிவு என்பது கூடவே வளர்ந்து வரும், அடுத்து வளர்த்தியிலும் என்பது சரீரப் பிரகாரமானதைப் பற்றி பேசுகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் சுத்தமாக இருக்கிறார்களா, நல்ல உணவை எடுத்துக் கொள்கிறார்களா என்று கவனிப்பது மிகவும் அவசியமானது.

மூன்றாவதாக தேவ கிருபை இது ஆவிக்குரிய காரியங்களை உள்ளடக்கிய ஒன்று. உபாகமம் 6 : 7, 11, 20 ஆகிய வசனப் பகுதிகளில் தேவனுடைய கற்பனைகளை தங்கள் பிள்ளைகளுக்கு கற்பித்தல் பற்றி மிக நேர்த்தியாக கூறுகிறது. எழுந்திருக்கும் போதும், வீட்டில் உட்கார்ந்திருக்கும் போதும், வழியிலே நடக்கிறபோதும், படுத்துக் கொள்ளுகிற போதும், காலை முதல் இரவு வரை தேவனுடைய வார்த்தைகளை நம் பிள்ளைகளுக்கு உபதேசித்துச் சொல்ல வேண்டும். ஆவிக்குரிய காரியங்கள் நம் குடும்பங்களில் எப்பொழுதெல்லாம் முக்கியமாகப் பேசப்படுகிறது? தாய்மார்களாகிய நாம் தான் அதிக கவனம் செலுத்தி அவைகளை பிள்ளைகளுக்கு ஊட்டிக் கொண்டேயிருக்க வேண்டும்.

நான்காவதாக மனுஷர் தயவு மனுஷர் தயவைப் பெற்று வளரும் படியாக நம் பிள்ளைகளை தூண்டவேண்டும். மனுஷர் தயவென்பது சமுதாயத்தோடு தொடர்புடைய ஒரு பண்பு. மற்றவர்களோடு சேர்ந்து பழகும் தன்மையை பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கவேண்டும். நல்ல பண்புகளோடு பிள்ளைகளை வளர்க்க வேண்டும். குழந்தைகளாயிருக்கும் போது அவர்கள் செய்கிற காரியங்கள் நமக்கு மகிழ்ச்சியாகவும், வேடிக்கையாகவும் இருக்கும். ஆனால் பெரியவர்களாகியும் அதே காரியங்களை செய்யும்போது அவைகள் நமக்கு வேதனையை கொடுப்பவைகளாக மாறி விடுகிறது. பிறரிடம் அன்பாக பழகி அவர்களிடம் தயவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமாக நம் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். "தயவு செய்து" "நன்றி" போன்ற வார்த்தைகளை பயன்படுத்த பழக்க வேண்டும். பெரியவர்கள் தங்கள் காரியங்களை பேசும் போது குழந்தைகள் அதில் குறுக்கிடுவதை தவிர்க்க வேண்டும், இவ்வகையான கிறிஸ்தவ குணங்களை சிறு வயதிலிருந்தே பழக்கப்படுத்தினால் நம்முடைய பிள்ளைகள் மனுஷர் தயவைப் பெற்று வளருபவர் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடைய பிள்ளைகளிடம் அன்பு செலுத்துவதென்பது அவர்களுக்கு "ஒழுக்கம்" என்ற சிறந்த பண்பை வளர்ப்பதாகும். கீழ்ப்படிதலோடு கூட சில கட்டளைகளையும் சேர்த்து பயிற்றுவிப்பதின் மூலம் ஒழுக்கத்தை கற்றுக் கொடுக்கமுடியும், தேவைப்பட்டால் சிற்சில தண்டனைகளும் கொடுக்கப் படலாம். நீதி 19 : 18ல் "நம்பிக்கையிருக்கு மட்டும் உன் மகனை சிட்சை செய் என்றும் 22 : 15ல் பிள்ளையின் நெஞ்சில் மதியீனம் ஒட்டியிருக்கும் ! அதை தண்டனையின் பிரம்பு அவனை விட்டு அகற்றும்", என்றும் பார்க்கிறோம். அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகள் பெரியவர்களாகட்டும் அப்போது

ஒழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கலாம் என்று இருப்பர். இது மாபெரும் தவறு". "ஐந்தில் வளையாதது, ஐம்பதிலும் வளையாது" என்பது நன்கு அறிந்த உண்மை.

சில கிறிஸ்தவத் தாய்மார்கள் தாங்கள் மாத்திரம் கர்த்தருக்கு பயந்து, அவருடைய வசனங்களின்படி நடக்கிறோம். அதைப் பார்த்து பிள்ளைகள் தானாகவே பக்தியுடன் வளர்ந்து விடுவார்கள் என்று எண்ணி ஏமாந்து விடுகின்றனர்.

I சாமு 3 : 13-ல் உள்ள வசனப்பகுதியில் கர்த்தருடைய ஆலயத்தில் ஆசாரியனாயிருந்த ஏலி தன் பிள்ளைகளை அடக்காமல் போன பாவத்தினிமித்தம் சாபத்தப் பெற்றுக் கொண்டான் என்று வாசிக்கிறோம். எனவே சிறுவயதிலிருந்தே ஒழுக்கத்தில் பிள்ளைகளை வளர்த்துவது நம்மேல் விழுந்த கடமையாகும்.

(தொடரும்)

# நீதிமான் யார்?

1. நியாயத்தையும், நீதியையும் செய்து
2. மலைகளின் மேல் சாப்பிடாமலும்
3. இஸ்ரவேல் வம்சத்தாரின் நரகலான விக்கிரகங்களுக்கு நேராகத் தன் கண்களை ஏறெடுக்காமலும்
4. தன் அயலானுடைய மனைவியைத் தீட்டுப்படுத்தாமலும்.
5. தூர ஸ்திரீயோடே சேராமலும்
6. ஒருவனையும் ஒடுக்காமலும், கொள்ளையிடாமலும்
7. கடன் வாங்கினவனுக்கு அடமானத்தை திருப்பிக் கொடுத்து
8. தன் அப்பத்தை பசித்தவனுக்குப் பங்கிட்டு
9. வஸ்திரம் இல்லாதவனுக்கு வஸ்திரம் தரிப்பித்து
10. வட்டிக்குக் கொடாமலும், பொலிசை வாங்காமலும்
11. அநியாயத்துக்குத் தன் கையை விலக்கி
12. மனிதருக்குள்ள வழக்கை உண்மையாய்த் தீர்த்து
13. கர்த்தருடைய கட்டளையின்படி நடந்து உண்மையாயிருப்பவனே

எசேக்கியேல் 18:5-9

# அப்போஸ்தலருடைய நடபடிகள் 8-ம் அதிகாரத்தில் நாம் காணும் முத்துக்கள்!

சில பிரசங்கிமார்கள் குறிப்பிட்ட சில அதிகாரங்கலைப் பற்றி போதிப்பதில்லை. இது வருத்தப்படக் கூடிய ஒரு தவறு. இந்த அதிகாரங்களைப் பற்றி கடந்த நாட்களிலே அதிகமாகவே போதிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் அவற்றின் செய்திகளை மக்கள் நன்றாகவே அறிவார்கள் என்பது அவர்களுடைய கருத்து. ஆனால் அதில் ஆபத்து என்னவென்றால், அந்த அதிகாரங்களில் பிரசங்கங்கள் நடைபெற்ற காலத்தில் இன்றைய வாலிபன் அவற்றைப் புரிந்து கொள்ள இயலாத சிறு வயதில் இருந்திருப்பான். எனவே அவனுடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தும் நல்ல பல வாய்ப்புகளை அவன் தவற விட்டிருப்பான்.

அது போன்ற பிரசித்தி பெற்ற ஒரு வசனப் பகுதி அப்போஸ்தலருடைய நடபடிகள் 8ம் அதிகாரம். இந்தச் சிறப்பு மிக்க, முக்கியமான பகுதியில் 26 முதல் 39 முடிய உள்ள வசனங்களை மறுபடியும் நாம் சந்தித்து, அங்குள்ள முத்துக்களைக் கண்டு பிடிப்போம்.

எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றத்தில் பரிசுத்த ஆவியானவரின் பணியானது மிகவும் சுவையான ஒன்று. சமாரிய மக்களுக்குப் போதித்துவிட்டு, பின்னர் அவர்களைத் திருமுழுக்குப் பெற செய்து, இறுதியாக பிலிப்பு எருசலேமுக்குத் திரும்பினார். அங்கே தேவனுடைய ஒரு தூதனானவன் பிலிப்புவை நோக்கி, தெற்கே காசா பட்டணத்திற்குப்போ என்று கூற, பிலிப்பு உடனே அங்கு சென்றார்: "ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடனே சொன்னார்", (வசனம் 29).

1 தீமோத்தேயு 4 : 1ம் வசனம் கூறுகிறது : ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி...." எத்தியோப்பியனுடைய நிகழ்ச்சியைப் பொருத்தவரை, இது தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இப்போது, இதைக் கவனியுங்கள் : எத்தியோப்பியனை பிலிப்புவிடம் சேர்த்த பின், ஆவியானவர் விலகிக் கொண்டார். பின்னர் அவர் தலையிடவில்லை. தேவனுடைய வார்த்தையைப் போதிப்பவனை

மாணவனிடம் கொண்டு வந்து சேர்க்கும் வேலையை ஆவியானவர் செய்தார். அதன் பின்னர், மனமாற்று நிகழ்ச்சியில், தேவனுடைய வல்லமை முற்றிலும் நற்செய்தியையும் அதை உபதேசிக்கும் மனித ஆசிரியனரயும் சார்ந்திருந்தது.

*"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்;*
*... விசுவாசிக்கிறவன் எவனோ அவனுக்கு இரட்சிப்பு*
*உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது". (ரோமர் 1 : 16).*

1 கொரிந்தியர் 1 : 21ம் வசனம் சொல்லுகிறது : "... பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்கத் தேவனுக்குப் பிரியமாயிற்று".

பிலிப்பு என்னை மிகக் கவர்ந்துள்ளார். அப்போஸ்தலருடைய நடபடி 6ம் அதிகாரத்தில், ஏழு உதவிக்காரர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, தனது கர்த்தருக்காக மேலும் மேலும் ஊழியஞ் செய்வதில் எப்போதுமே பிலிப்பு ஆர்வமுள்ளவராக இருந்தார். ஸ்தேவானின் மரணத்திற்குப்பின், சவுலின் மிகுந்த 'வல்லமைக்கும் கோபத்திற்கும் மத்தியில், எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்கள் சிதறிப் போயிருந்தனர். (அப். 8 : 4). லூக்கா எழுத்தர் பிலிப்புவின் மேல் தன்து ப்பார்வையைச் செலுத்தி, குறிப்பிடுகிறார்: "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய் அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்". (அப். 8 : 5). பிலிப்புவின் புகழுக்குக் கிரீடம் வைத்த அதிகாரம் இது. அவருடைய பெயர் பதினான்கு இடங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. எத்தியோப்பியனுடைய மனமாற்றத்திற்குப் பின், பிலிப்பைப் பற்றி மீண்டும் ஒரே ஒரு தடவை மட்டும் அப். 21 : 8 9 வசனத்தில் நாம் படிக்கிறோம் : "....., ஏழு பேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம். தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு இருந்தார்கள்". அவருடைய பணி உணவு பரிமாறுவதிலிருந்து ஆரம்பமாயிற்று. தனக்கு அளிக்கப்படும் எந்த ஒரு பதவியையும் விரும்பி செய்யும் ஒரு மனிதனின் அருமையான உதாரணத்தை பிலிப்புவில் நாம் காண்கிறோம். எந்த வேலையாக இருந்தாலும் சரி, இயேசுவுக்கு ஊழியஞ் செய்ய அவர் விரும்பினார்!

பிலிப்பு இயேசுவைப் போதித்தார். அது ஒரு எளிமையான, சகலவற்றையும் உள்ளடக்கிய வர்ணனை. அவர் இயேசுவைப் போதித்தார். இந்த உதவிக்காரனிடமிருந்து இந்த உலகம் முழுவதும் ஒரு பெரும் உண்மையைக்

கற்றுக் கொள்ளட்டும். இயேசுவைப் போதிப்பதில் நற்செய்திக்குக் கீழ்ப்படிவதும் அடங்கியுள்ளது! நாம் இயேசுவைப் போதிக்கும் போது, திருமுழுக்கின் அவசியத்தைப் பற்றிக் கூறத்தவறினால் பிலிப்பைப் போன்றவர்களின் வரிசையிலிருந்து நாம் விலகிப் போய் விடுகிறோம். இயேசு கற்பித்தார்: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்... " (மத்தேயு 28 : 19, 20).

இப்போது அந்த எத்தியோப்பியனைக் கவனிப்போம். எத்தியோப்பிய அரசப் பெண்மணியான கந்தாகே, அவனை மந்திரியும் அவளுடைய பொக்கிஷங்களின் தலைவனுமாக நியமித்திருந்தாள். அவள் அவனை நம்பினாள். தேவனைப் பிரியப்படுத்தும் வழியில் தங்கள் இருதயங்களை மனிதர்கள் திருப்பும் போது, அது எப்போதுமே அவர்களை சக மனிதர்களிடத்தில் மிகவும் நேர்மையாக நடக்க வைத்திருக்கிறது. (மனமாற்றமும் உண்மையே). எத்தியோப்பியாவிலிருந்து, இந்த மனிதன் தொழுது கொள்ள விரும்பி புறப்பட்ட எருசலேம் பயணமானது 1000 - 1200 மைல்கள் தூரமுள்ளதாக இருந்தது. உண்மை தேவனை தொழுது கொள்ளவும், அவருடைய கட்டளைகளைக் கற்றுக் கொள்ளவும், இப்படிப்பட்ட தியாகங்களைச் செய்யக்கூடிய ஒரு மனிதன், நிச்சயமாக ஒரு சிறந்த பொக்கிஷதாரராக இருக்க முடியும்.

அவன் ஒரு நபும் சகனாக இருந்தபடியால், தேவனிடமிருந்து வந்த கட்டுப்பாடுகளை அவன் சந்திக்க வேண்டியவனாக இருந்தான். உபாகமம் 23 : 1ம் வசனம் தெளிவாகக் கூறுவது போல, அவன் "கர்த்தருடைய சபைக்கு உட்படலாகாது". என்றபோதிலும் யூதச் சட்டத்திற்கு நபும்சகர்கள் மாற்றப்படக்கூடும் என அப்போஸ்தலருடைய நடபடி 8ம் அதிகாரத்திலிருந்து நாம் அறிகிறோம்.

எத்தியோப்பியனுடைய இரத்தை பிலிப்பு அடைந்த போது, கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய ஏசாயா 53ம் அதிகாரத்தை அவன் படித்துக் கொண்டு வருவதைக் கேட்டாள். இந்த வசனப்பகுதியின் மூலமாக அவனுக்கு "இயேசுவைப் போதித்தான் "(அப். 8: 35). ஆனால் மூன்றே அதிகாரங்களுக்குப்

பின், அதாவது 56ம் அதிகாரத்தில் நாம் இவ்வாறு படிக்கிறோம். " அண்ணகனும் இதோ, நான் பட்ட மரமென்று சொல்லானாக. என் ஓய்வு நாட்களை ஆசரித்து, எனக்கு இஷ்டமானவைகளைத் தெரிந்து கொண்டு, என் உடன்படிக்கையைப் பற்றிக் கொள்ளுகிற அண்ணகர்களைக் குறித்துக் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நான் அவர்களுக்கு என் ஆலயத்திலும், என் மதில்களுக்குள்ளும் குமாரருக்கும் குமாரத்திகளுக்குமுரிய இடத்தையும் கீர்த்தியையும் கொடுப்பேன் என்றும் அழியாத நித்திய நாமத்தை அவர்களுக்கு அருளுவேன்".

அந்த எத்தியோப்பியன் அதைப் படித்திருந்தானா? அவனுடைய தேவனோடு உள்ள இந்த நெருங்கிய உறவைப் பற்றி இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள ஏசாயா அதிகாரத்தை அலசிக் கொண்டிருந்தானா? நமக்குச் சொல்லப்படவில்லை என்றபோதிலும், அன்றைய நாளிலே எத்தியோப்பியாவிலேயிருந்து வந்த அந்த நல்ல மனிதன், கிறிஸ்துவின் நற்செய்தியைக் கேட்டு, அவனுடைய கர்த்தருக்குள் திருமுழுக்குப் பெற்றான் என்பதை நாம் அறிகிறோம். அவன் அன்பான ஆசிரியருக்கு விடை கொடுத்தபின், அந்த எத்தியோப்பியன் "சந்தோஷத்தோடே தன் வழியே போனான்". அழிவில்லாத அந்த நாமத்தைத் தரித்துக் கொள்ளும் சலுகையை அவன் அடைந்துள்ளான் என்பதை இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள். வானாதி வானத்திலே வாசம் செய்யும் தேவனுடைய வீட்டிலே அவனுக்கு இப்போது ஒரு வாசஸ்தலம் உண்டாயிற்று! கிறிஸ்துவின் நாமத்தை அவன் தரித்துக் கொள்ளுகிறான். அவன் ஒரு கிறிஸ்தவன்.

கர்த்தர் மீண்டும் வருமளவும், எத்தியோப்பியனைப் போன்ற மக்கள் மனதிலே தேவனுடைய வார்த்தை விதைக்கப்படட்டும்! அப். 8 : 38ம் வசனத்தில் காணப்பட்டதைப் போன்ற மனமாற்றங்கள் மீண்டும் மீண்டும் நடைபெறட்டும். பிலிப்புவைப் போல, நமது வாயைத் திறந்து, சுவிசேஷத்தில் தொடங்கி, இயேசுவை நாம் போதிக்கும் போது, மனமாற்றங்கள் நடைபெறுகின்றன என்பதை கிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்ட நாம் நினைவில் கொள்ளுவோம்.

Glenn Colley

எஸ். எஸ். ராஜன்.

# வேதாகமம் தேவனுடைய வார்த்தை என நீ ஏன் நம்ப வேண்டும்?

உலக முழுவதிலுமுள்ள மக்களில் கோடிக்கணக்கானவர்கள் வேதாகமத்தை தேவனுடைய வார்த்தை என்று நம்புகின்றனர். கேள்வி கேட்காமல், வேதாகமத்தை உண்மையென அவர்கள் ஏற்றுக் கொள்கின்றனர். மற்றவர்கள் வேதாகமம் கூறுவதை பரிசோதிக்காததாலும், அதன் கனிகளை ருசித்துப் பார்க்காததாலும் அதை சந்தேகக் கண்களுடன் பார்க்கின்றனர். இன்னும் சிலரோ வேதாகமத்தை முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளி விடுகின்றனர். ஏனெனில் இவ்வுலகில் அவர்கள் பிறந்து, வளர்க்கப்பட்டது வேறு ஏதோ ஒன்றை ஏற்றுக் கொள்ளுவதற்காக. கடைசி இரு பிரிவுகளில் ஏதாவது ஒன்றில் நீங்கள் இருக்க நேர்ந்தால், இக்கட்டுரை உங்களுக்காக எழுதப்படுகிறது. வேதாகமம் தேவனுடைய வசனம் என நீங்கள் ஏன் விசுவாசிக்க வேண்டுமென்பதற்கான சில காரணங்களை சுருக்கமாக உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

1. வேதாகமம் தேவனுடைய வசனம் என உரிமை கொண்டாடுகிறது. அது கர்த்தருடைய வசனம் என அழைக்கப்படுகிறது. (எரேமியா 14 : 1). தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டபடியே பேசினார்கள், என பேதுரு கூறினார். (2 பேதுரு 1: 20, 21) பழைய ஏற்பாட்டை தேவனுடைய வசனம் எனக் கூறி, அதிலிருந்து கிறிஸ்து அடிக்கடி மேற்கோள் காட்டினார், (யோ. 10 : 35) இறுதியாக, தேவனால் ஏவப்பட்டு நமக்கு இவை யாவும் அருளப்பட்டன என பவுல் நமக்குக் கூறுகிறார். (2 தீமோ 3 : 16, 17).

2. உண்மையான விஞ்ஞானத்தோடு வேதாகமம் ஒத்துப் போகிறது. உலகம் உருண்டை என்றும், சமுத்திரத்தில் பாதைகள் இருந்தன என்றும், இன்னும் நூற்றுக்கணக்கான இதர உண்மைகளையும் மனிதன் கண்டுபிடிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே, வேதாகமம் அவற்றை கூறியிருந்தது. (ஏசாயா 40 : 22, சங். 8). இக்காரியங்களையெல்லாம் அவ்வளவு காலத்திற்கு முன்பாகவே வேதாகம எழுத்தர்கள் எவ்வாறு அறிந்திருந்தனர்? தேவன் அவர்களுக்கு அதை வெளிப்படுத்தியிருந்தார்.

3 தொல்பொருள் ஆராய்ச்சியின் பல கண்டுபிடிப்புகள் வேதாகம உண்மைகளை உறுதி செய்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற காரியங்களை இவ்விதக் கண்டுபிடிப்புகள், வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளன. ஆனாலும் அவை அனைத்தும் வேதாகமம் கூறும் உண்மைகளை முற்றிலுமாக ஒத்தே அமைந்துள்ளன. ஜலப்பிரளயத்தைப் போன்ற சில வேதாகமக் கதைகளை சந்தேகப்பட்ட மக்கள் இருந்தனர். ஆனால் 1872ம் ஆண்டு ஜியார்ஜ் சுமித் கண்டுபிடித்த பாபிலோனிய கல்வெட்டுகள் ஜலப் பிரளயத்தைப் பற்றியும் கூறுகின்றன. மற்றும் பல உதாரணங்களைக் காட்ட முடியும்.

4. வேதாகமமும் புவி இயலும் ஒத்துப் போகின்றன. இக்காலத்திலுள்ள மலைகள், நதிகள், நகரங்கள் போன்றவைகளை இன்றுள்ள பெயர்களிலேயே வேதாகமம் குறிப்பிடுவதைக் காணலாம். உண்மையிலே இல்லாத பல இடங்களின் கற்பனை பெயர்களை வேதாகமம் பூட்டியலிட்டுக் கூறவில்லை என்பதை இது தெளிவாக்குகிறது.

5. வேதாகமும் உலக சரித்திரமும் ஒன்றொடொன்று ஒத்துப் போகின்றன. உதாரணமாக, உலகத்தில் பல சரித்திர நிகழ்ச்சிகளில் நடைபெற்றதாக விளக்கப்பட்டுள்ள காரியங்களை ஏற்கனவே வேதாகமம் கூறியிருக்கிறது. வேதாகமம் வெறும் கட்டுக் கதைகள் அடங்கிய புத்தகமாக இருப்பின் இது எவ்வாறு சாத்தியமாகும்?

6. வேதாகமம் மனிதனால் மட்டுமே எழுதப்பட்டிருக்க முடியாது; ஏனெனில் அதில் காணப்படும் பல காரியங்கள் மனித அறிவுக்கு அப்பாற்பட்டவைகளாகி இருக்கின்றன. மனிதன் மட்டுமே அதை எழுதி இருந்தால், இந்நாள் வரை வேறு ஒரு மனிதனும் கூட ஏன் அதற்கு ஈடான ஒரு புத்தகத்தை எழுதக் கூடாமற் போயிற்று? மனிதன் அதை எழுதி இருந்தானனால், இன்று அதைவிடச் சிறந்த வேறு ஒரு புத்தகத்தை மனிதன் எழுதியிருப்பான்.

7. வேதாகமம் ஒரே காரியத்தைப் பேசும் ஒரு வியப்பான புத்தகம் 1600 ஆண்டுகளாக 40 வித்தியாசமான, பல்தரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டு பல இடங்களில் வசித்து வந்தவர்களால் வேதாகமம் எழுத்தப்பட்டிருந்த போதிலும், அவை அனைத்தும் ஒரே பூரணமான புத்தகமாக அமைந்துள்ளது. அதை எழுதும் பணியில் முழுவதுமாக தேவனுடைய வழிகாட்டுதல் இல்லாத பட்சத்தில் அது எவ்வாறு சாத்தியமாகும்?

8 வேதாகமம் பல தீர்க்க தரிசனங்ளை தன்னுள் அடக்கியுள்ளதோடு மட்டுமன்றி, அவை எவ்வாறு நிறைவேறின என்பதையும் வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, கர்த்தருடைய ஆவி எப்போது ஊற்றப்படும் என்ற காலத்தைப் பற்றி யோவேல் 2 : 28, 29 வசனங்களில் எழுத்தர் குறிப்பிடுகிறார். பின்னர் அப்போஸ்தலர் நடபடி 2ம் அதிகாரத்தில், யோவேல் தீர்க்கதரிசியால் அன்று கூறப்பட்டது. இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என பேதுரு கூறுகிறார். கிறிஸ்துவைப் பற்றிய பல தீர்க்க தரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் உள்ளன. அவை அனைத்தும் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியிருக்கின்றன. (ஏசாயா 53 : 5; லூக்கா 22 : 63, 64 வசனங்களைப் படியுங்கள்).

9. காலத்தின் சகல சோதனைகளையும் வென்று, வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நிலைநாட்டியுள்ளது. அதற்குப்பல எதிரிகள் இருந்து வந்தனர். ஆனால் அனைவரும் தோற்றுப் போயினர். பல நூற்றாண்டுகளாக அது பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. பழங்கால மூலப் பிரதிகளுடன் இன்றைய மொழியாக்கங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் அவை சீராக இருப்பது விளங்கும்.

10. மனிதனுடைய பெரிய கேள்விகளுக்கு வேதாகமம் விடை அளிக்கிறது. மனிதன் எங்கிருந்து வந்தான்? வாழ்வில் அவனுடைய இலட்சியம் என்ன? அவன் எங்கே போகிறான்? இவை அனைத்துக்கும் விடை அளிக்கும் ஒரே புத்தகம் வேதாகமம் மட்டுமே. மனிதர்கள் தேவனிடத்திலிருந்து வந்தனர். (ஆதியாகமம் 1 : 26, 27), அவனைப் படைத்தவரை மகிமைப்படுத்துவதே அவனுடைய இலட்சியம் (1 பேதுரு 4 : 11); அவன் நித்தியத்தை ஏதாவது ஒரு இடத்தில் நிச்சயமாக அனுபவிப்பான் (மத்தேயு 25 : 46).

11. உலகம் முழுவதிலும் உள்ள எந்த ஒரு புத்தகமும் மனிதனிடம் செய்ய முடியாத மிகப்பெரிய, மிகச் சிறந்த தாக்கத்தை வேதாகமம் செய்துள்ளது. உலகத்தில் கெட்டவர்கள் இருந்தபோதிலும், வேதாகமத்தின் தாக்கத்தால் மட்டுமே தான் உலகத்தில் நல்லவர்கள் பலர் இருக்கின்றனர்.

வேதாகமம் ஒருபோதும் அழியாது. யோவான் 12 : 48ம் வசனத்தில் கிறிஸ்து அவ்வாறு கூறுகிறார்.

எனவே, உண்மையிலேயே வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. தேவனிடமிருந்து அது மனிதனுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. அதுவே சத்தியம், பூமியிலிருந்து பரலோகத்திற்குச் செல்ல அது ஒரு வழிகாட்டி. அதை விசுவாசித்து, அதன் உபதேசங்களுக்குக் கீழ்ப்படிந்து, அதின் வாக்குத் தத்தங்களால் ஆசீர்வதிக்கப்படுவீர். நிச்சயமாக, இப்போது நீங்களும் வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பதை நம்புவீர்கள்.

தமிழில் : **S.S.** ராஜன்.

# கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மதமா?

கிறிஸ்தவம் ஒரு வெளிநாட்டு மதம் என்றோ, அல்லது மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மதம் என்றோ சில வேளைகளில் சிலர் கூறுவதை நாம் கேட்கிறோம். இன்னும் சிலரோ அது வெள்ளைக்காரனுடைய மதம் என்று சொல்லுகின்றனர். சந்தேகமில்லாமல், இவ்வாறு அறிவிப்பவர்கள் அனைவரும் கிறிஸ்தவத்தின் எதிரிகளாகத் தான் இருக்கின்றனர். கிறிஸ்தவம் எங்கிருந்து வந்தது, யாருக்காக வந்தது என்பது பற்றி மக்கள் அறியாதிருக்கின்றனர் என அவர்கள் எண்ணுகின்றனர். எனவே, இப்படிப்பட்ட ஒரு பிரச்சாரத்தில் இறங்கி, மக்களின் உணர்ச்சிகளை தட்டி எழுப்பி, கிறிஸ்துவின் மார்க்கத்திற்கு விரோதமான விஷத்தையும் எதிர்ப்பையும் அவர்களின் மனதில் செலுத்து விடுகின்றனர்.

இக்காரியங்களின் உண்மையை அறிந்த மக்களுக்கு, கிறிஸ்துவே எருசலேமுக்கு அருகிலுள்ள பெத்லகெமில் தான் பிறந்தார் எனத் தெரியும். (மத். 1 -2 ). கிறிஸ்துவின் உபதேசங்கள் மூலமாகவும், அவர் மரணம், அடக்கம், உயிர்ப்பு, பரலோகத்திற்கு எழுந்தருளிப்போனது, அதன் பின்னர் எருசலேமில் நற்செய்தி போதிக்கப்பட்டது, இவை அனைத்தின் விளைவாகவும் 3000 பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவ்வாறாக, கிறிஸ்தவம் அல்லது கிறிஸ்துவினுடைய மார்க்கம் தொடங்க அங்கே வித்திடப்பட்டு, பின்னர் உலகின் பிற பகுதிகளுக்கும் பரவிற்று. கடந்த சுமார் 2000 ஆண்டுகளாக கிறிஸ்தவம் உலகின் சகல பகுதிகளுக்கும் சென்றிருக்கிறது. உபதேசத்தாலும் நற்பணிகளாலும் மட்டுமே அது பரவி, அதற்காகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ, அல்லது ஒரு பிரிவு மக்களுக்கோ கிறிஸ்தவம் முற்றிலுமாக ஒரு போதும் சொந்தமாக இருந்ததில்லை. அது எல்லோருக்காகவும், எல்லாரையும் சம்பந்தப்பட்டும் இருக்கிறது. உலகின் மேற்குப்பகுதி நாடுகளில் அது இருக்கிறதென்றால், அங்குள்ள மக்கள் கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்து தான் கிறிஸ்தவராயிருக்கின்றனர். என்றபோதிலும், கிறிஸ்துவின் உபதேசத்தோடு மனிதன் போதனையைக் கலந்ததின் விளைவைத்தான் அங்கே நாம் அதிகமாகக் காணமுடிகிறது. கர்த்தருக்கு இது பிரியமான காரியம் அல்லவே அல்ல. (ரோமர் 16 : 17, 18). எல்லா மக்களும் அவருடைய கட்டளைகளுக்கு

கீழ்ப்படிந்து அவற்றை கடைபிடித்து அதன் மூலமாக கிறிஸ்தவர்களாக, கிறிஸ்தவர்களாக மட்டுமே, இருப்பதையே அவர் விரும்புகிறார். (1 பேதுரு 4 : 16). மேற்கு நாடுகளில் உள்ள சிலர் இதைச் செய்யத்தான் முயன்று கொண்டிருக்கின்றனர்.

ஆசியா, ஆப்பிரிக்கா கண்டங்களிலும், மற்றும் கடல் தீவுகளிலும், உலகில் இதரப் பகுதிகள் எங்கும் கிறிஸ்தவம் காணப்படுகிறதென்றால், அதற்குக் காரணம், தங்களுடைய வாழ்வை மாற்றி, அவர்களை நல்வழிப்படுத்தி, நித்திய வாழ்விற்காக ஆயத்தப்படுத்த கிறிஸ்தவம் தேவை என்பதை அவர்கள் நம்புகின்றனர். ஆசியாவில் கிறிஸ்தவம் தோன்றியது என்றால், ஆரம்பத்தில் ஆசியாவிலிருந்த கிறிஸ்தவர்கள் மேற்கத்திய நாடுகளுக்குச் செய்தியை எடுத்துச் சென்றுள்ளனர். காலப் போக்கிலே, கீழ்த்திசை நாடுகளிலுள்ள மக்கள் கிறிஸ்தவ மதத்திலிருந்து விலகிச் சென்றபடியால், மேற்கத்திய நாடுகளிலுள்ள விசுவாசிகள், கீழை நாடுகளுக்கு அதை திருப்பிக் கொண்டு வர ஆரம்பித்தனர். எனவே, யாரிடம் இருக்கிறதோ அவர்கள் இல்லாதவர்களிடம் எடுத்துச் செல்லுகின்றனர். இவ்வாறு தான் எப்போதுமே நடந்து வந்திருக்கிறது. இனியும் சந்தேகமின்றி இப்பழக்கம் தொடரும்.

கிறிஸ்தவர்களாகும் சந்தர்ப்பம் உலகின் சகல திசைகளிலும் உள்ள சகல மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என கர்த்தர் கருதினார். எனவே, அப்போஸ்தலர்களுக்கு அவர் கட்டளையிட்டார்: "ஆகையால் நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீடராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்." (மத்தேயு 28 : 19, 20). "பின்பு, அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்குப் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெறுவன் இரட்சிக்கப்படுவான்." (மாற்கு 16 : 15, 16). எனவே, இறுதி காலம் வரையுள்ள சகல மக்களிடமும் கிறிஸ்தவம் நிலைத்து நிற்கும். ஒவ்வொரு தலைமுறைக்கும் அது கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். எனவே, நற்செய்தியை உலக முழுவதும் எடுத்துச் செல்லும் பொறுப்பு ஒவ்வொரு தலைமுறையிலும் உள்ள கிறிஸ்தவர்களுக்கும் உண்டு.

மீண்டும், புதிய ஏற்பாடானது எழுதப்பட்ட நிலையில் நம்மிடமிருக்கிறது. கிறிஸ்து தாமே அதை விதை என்று வர்ணித்திருக்கிறார். (லூக்கா 8 : 11). அதாவது, வாய் வார்த்தை வழியாகவோ, கைப்பிரதிகள் வழியாகவோ அந்த

விதை தூவப்படும் போது, அதைப் பெற்றுக் கொண்டு அதற்குக் கீழ்ப்படிகிறவர்கள் கிறிஸ்தவர்களாகின்றனர் எனப் பொருள். இங்கே இந்திய நாட்டிலோ, அல்லது எங்கெல்லாம் கர்த்தருடைய வசனம் காணப்படுகிறதோ அங்கெல்லாம் வசிக்கும் மக்கள், அதைப் படித்து, கற்றுக் கொண்டு, அதன் உபதேசங்களுக்கு, வெளியார் உதவி எதுவுமின்றி, அவர்களாகவே கீழ்ப்படிய முடியும். அவ்வாறு கீழ்ப்படிய விரும்பும் மக்கள் இருக்கும்போது, அவர்கள் அப்படிச் செய்யக்கூடாது என்றோ அல்லது முடியாது என்றோ மறுக்கும் உரிமை யாருக்கு உண்டு? பலவந்தமாக பலர் மேல் திணிக்கப்படும் மதம் பயனற்றது. மதக்காரியங்களில் தான் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் சுதந்திரம் ஒரு மனிதனுக்கு இல்லையென்றால், அவனுக்கு ஒரு சுதந்திரமும் இல்லை. ஒருவன் கிறிஸ்தவத்தை மறுக்கவோ, உதறித்தள்ளவோ விரும்பினால், அது அவனுடைய விருப்பம். ஆனால் கிறிஸ்தவ மார்க்கத்தை ஏற்றுக் கொள்ள ஒருவன் விரும்பினால், அப்படிச் செய்யும் உரிமையை அவனுக்கு அளிக்க வேண்டும். அதுவே உண்மையான சுதந்திரம்.

தூய கிறிஸ்தவத்துக்கு உலகில் தலைவர் ஒருவர் இல்லை; தலைமையகமும் இங்கு இல்லை. கிறிஸ்துவே அதன் தலைவர். (கொலோ. 1 : 18; எபே. 1 : 22, 25). அவர் பரலோகத்தில் இருக்கிறார். "தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". (யோவான் 3 : 16). "அப்பொழுது, பேதுரு பேசத் தொடங்கி தேவன் பட்சபாத முள்ளவர் அல்ல என்றும், எந்த ஜனத்திலாகிலும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்." (அப். 10 : 34, 35). "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3 : 9). கர்த்தரைப் பற்றிக் கூறும் போது, பவுல் சொல்லுகிறார் :"எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." (1 தீமோ. 2 : 4), மனிதனுடைய தனிப்பட்ட தேவை குறித்து செயல்படுவதால், கிறிஸ்தவம் உலக முழுவதின் கவனத்தை ஈர்க்கிறது.

கிறிஸ்துவையும், கிறிஸ்தவத்தையும் எவரும் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என உரிமை கோர இயலாது. அல்லது கிறிஸ்தவம் மேற்கத்திய அல்லது கிழக்கத்திய மதம் என யாரும் தவறாகக் கருதத் தேவையில்லை. உலக

முழுவதிலும் உள்ள சகல மக்களுக்கும் அது சொந்தமாக ஒவ்வொருவரும், அதை தங்களுக்குச் சொந்தமானதென்றும், தங்கள் தேவைகளைச் சந்திக்கவல்லது என்றும் கருதுவதோடு, பிறருக்கு எடுத்துச் செல்லும் பொறுப்பையும் தம்மிடம் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கருத வேண்டும். அதைக் கண்டு பயப்படவும் வேண்டாம், அதை எதிர்க்கவும் வேண்டாம். அது உங்களையோ, உங்கள் நாட்டையோ, அல்லது யாரையுமோ பாதிக்காது. அரசியலில், சொத்துக்களில் அல்லது பலவந்தப்படுத்துவதில் அதற்கு அக்கரை கிடையாது, அது உண்மையான கிறிஸ்துவின் மார்க்கமாக இருக்கும்பட்சத்தில் அதை தாங்குகிறவர்களைக் கொண்டு அல்ல, அதனுடைய உபதேசத்தைக் கொண்டே அதை எடை போடுங்கள். மாறாக, உங்களுக்கும் அதை ஏற்றுக் கொள்ளுகிறவர்களுக்கும் அது என்ன செய்யக் கூடும் என்று பாருங்கள். அதன் மேல் உங்களுடைய இறுதி தீர்ப்பை அளிக்கும் முன்பு, குறைந்த பட்சம் "அது என்ன என்று தான் பார்ப்போமே!" என அதை ஆராய்ந்து பார்த்து முடிவுக்கு வாருங்கள். நியாய உணர்வுடன், நடுநிலையில் நின்று, அவ்வாறு நீங்கள் செய்யும் போது, கிறிஸ்தவத்தைப் பற்றிய உங்கள் கருத்தை நிச்சயம் மாற்றிக் கொள்வீர்கள்.

**J.C. சோட்**

## வாலிபர்களே, உங்கள் சிந்தனைக்கு

*வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும், உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட, ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.*

*நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே.*

பிரசங்கி **11 : 9-10**

# கிறிஸ்துவின் சபையின் தலைமையகம் எங்கே?
# (WHERE IS THE HEAD QUARTERS)

எல்லா நாமகரன சபைகளுக்கும் இந்த உலகத்தில் தலைவர்களுக்கும் ஒரு தலைமையகமும் இருக்கின்றன. அதுபோல, கிறிஸ்துவின் சபைக்கும் ஒரு பெருந்தலைவரும் ஒரு தலைமையகமும் உலகில் இருக்க வேண்டுமே; அது எங்கேயிருக்கிறது? என இன்று பலர் கேட்கின்றனர்.

என்றபோதிலும், கிறிஸ்துவால் கட்டப்பட்டு, வேதாகமத்தில் காணப்படும் நான் அங்கம் வகிக்கும் – அந்த ஒரே சபைக்கு உலகப் பிரகாரமான ஒரு தலைமையகம் கிடையாது.

கிறிஸ்துவே அவருடைய சபைக்குத் தலைவர், "எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" என வேதாகமம் கூறுகிறது (எபே. 1:22, 23) கிறிஸ்துவே அவருடைய சபையின் தலைவராக இருப்பதாலும் தேவனுடைய வலது பாரிசத்தில் இன்று அவர் வீற்றிருப்பதாலும், பரலோகத்திலேயே கிறிஸ்துவின் சபையின் தலைமையகம் உள்ளது. (அப் 7:55, 56)

ஒவ்வொரு பிராந்திய சபையும் அதில் அங்கம் வகிப்பவர்களின் ஆளுகைக்குட்பட்டது என புதிய ஏற்பாடு கூறுகிறது. சபையைக் கண்காணிப்பவர்கள் பிஷப், பாஸ்டர், மூப்பர் என அழைக்கப்பட்டனர். எப்போதுமே ஒன்றுக்கு மேற்பட்டவர்களே பிராந்திய சபையை வழி நடத்துவதாக வேதாகமம் கூறுகிறது. (தீத்து 1: 5; அப். 14:23) அவரவர் அங்கம் வகிக்கும் பிராந்திய சபைகளுக்கும் மட்டுமே அவர்கள் கண்காணிப்பவர்களாக இருக்கின்றனர். (அப். 20:17, 28)

பிராந்திய சபையைக் கண்காணிப்பதும், மேய்ப்பதும், ஆத்தும இரட்சிப்புப் பணிகளை மேற்கொள்ளுவதும் அவர்களுடைய பொறுப்புகள் என வேதாகமம் கூறுகிறது. (1 பேதுரு 5:1–3; 1 தீமோ 3:4, 5; எபி. 13:17)

தமிழில் : எஸ்.எஸ். ராஜன்

# நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல்...

கிறிஸ்துவின் சுவிசேஷத்தை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அவருடைய குடும்பமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். (மாற்கு 16 : 15, 16, அப் 2 : 47) அவருடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் வேற்றுமைக்கு இடமில்லை. கிறிஸ்துவுக்குள் எல்லாரும் ஒன்றாயிருக்கிறார்கள். இன வேற்றுமை, மொழி வேற்றுமை, நிற வேற்றுமை என்கின்ற பாகுபாடில்லை. ஆகையால் நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருந்து . . . (எபே 2 : 19) கிறிஸ்துவுக்குள் யூதன் என்றும், கிரேக்கன் என்றும், புறஜாதி என்றும் வித்தியாசம் இல்லை. (கலா 3 : 27 - 28) எல்லாரும் ஓர் இனமாக கிறிஸ்துவுக்குள் ஒன்றே இருக்கின்றோம். இருப்பினும் இரண்டாயிரம் ஆண்டுகள் சென்றாலும் நம்மிடையே இன்னும் வேற்றுமை உணர்வுகள் இருந்து கொண்டே இருக்கின்றது. அவைகளில் சில இதோ . . .

**1. இன வேற்றுமை**

இஸ்ரவேலரிடம் யூதர் என்றும், புறஜாதி என்றும் இன வேற்றுமை இருந்தன. மெய்யான தேவனை வணங்குகிற இஸ்ரவேலர் யூதராகவும், பொய்யான தேவர்களை ஆராதிக்கின்ற அதாவது விக்கிரக ஆராதனை செய்கின்ற அனைவரும் புறஜாதி என்றும் கருதப்பட்டனர். தேவன் அவர்களுடைய விக்கிரகத்தினிமித்தமாகத்தான் அவர்களை வெறுத்தார் இனத்தால் வெறுக்கவில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் விக்கரக ஆராதனை செய்து பின்பு மனந்திரும்பி யூத மார்க்கத்தில் சேர்ந்து கொண்டு இருந்தார்கள் (அப் 2 : 10) ரூத் என்கின்ற ஸ்திரீயும் மாதிரியாக இருக்கிறாள். (ரூத் 1 : 4, 16)

அப்போஸ்தலருடைய நாட்களில் தேவன் இன வேற்றுமையை அழித்திருந்தாலும் அப்போஸ்தலரில் சிலருக்கு இன வேற்றுமை உணர்வு இருந்திருக்கின்றது. பவுல் அதை கடிந்து கொண்டு அப்போஸ்தலரையும் கடிந்து கொண்டார். (கலா 2 : 11 - 20) யூத மக்களிடம் இன வேற்றுமை அதிகமாக இருந்திருக்கிறது. (அப் 10 : 28) இப்படிப்பட்ட வேற்றுமை உணர்வால் மற்ற இனத்தாரோடே திருமண ஒப்பந்தம், அவர்களுடைய வீட்டில் விருந்து சாப்பிடுவது போன்றவைகளிலிருந்து விலகி இருப்பார்கள். சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பும் இப்படிப்பட்ட வேற்றுமைகள் இருந்திருக்கின்றன. ஆகையால் தான் பேதுரு

அப்போஸ்தலன் புறஜாதியான கொர்நெலியு வீட்டில் சாப்பிட்டு விட்டு தன் இனத்தாருக்கு பயந்து கொண்டு மாய்மாலம் பண்ணினதை பவுல் கடுமையாக கண்டித்தார்.

இன்றும் சபையில் சிலர் இன வேற்றுமை பார்க்கிறவராக இருக்கிறார்கள். தங்களுடைய பிள்ளைகளின் திருமண விசயத்திலும், தங்கள் வீட்டில் நடைபெறும் எல்லா விசேஷங்களுக்கும் தனது இனத்தாருக்கு மட்டும் அழைப்பு விடுத்து, சபை போதகரை மட்டும் ஜெபத்திற்கு அழைத்து விசேஷங்களை நடத்துகிறார்கள். இவைகள் அனைத்தும் மாம்சத்தின் கிரியைகளாயிருக்கிறது. இன வேற்றுமை பார்க்கிறவர்கள் அனைவரும் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிருக்கிறார்கள். (ரோமர் 8 : 8, கலா 5 : 19 - 21) நமது வீட்டின் விருப்பங்களுக்கும், விருந்துகளுக்கும் நம்மை விட தாழ்த்தப்பட்டவர்களை அழைத்தால் பாக்கியவனாயிருப்போம். (லூக் 14 : 13, 14)

**2. *மொழி வேற்றுமை***

இனத்தால் கிறிஸ்துவினிடமித்தம் ஒன்றுபட்டிருக்கிற நாம் அனைவரும் மொழி வேற்றுமை உணர்வுகளோடு இருக்கலாகாது. நான் பேசும் தாய்மொழியே சிறந்தது. என்னுடைய மொழிக்கு ஈடு இணை வேறு எந்த மொழிக்கும் கிடையாது. உன்னுடைய மொழி மேலானதல்ல அது கீழ்த்தரமானது உனது மொழிக்கு எந்தவிதமான பெருமையும் கிடையாது என்றெல்லாம் வாக்குவாதங்கள் இவ்வுலகில் காணப்பட்டாலும் நாம் இவைகளுக்கு அடிமைப்படாமல் இருக்க வேண்டும். எல்லா மொழிகளும் நம்முடையதே என்றும் எல்லா மொழிகளும் சிறந்ததே என்றும் நினைக்க வேண்டும். ஏனெனில் இவ்வுலகில் காணப்படுகின்ற அனைத்து மொழிகளையும் உண்டாக்கியவர் நம் தேவனே. ஆதிமனிதன் ஒரே மொழியைத்தான் பேசிக் கொண்டு இருந்தான் பின்பு சந்ததி பெருகியது. பாபேல் கோபுரத்தில் ஒரே மொழியுடன் இருந்தவர்களை தேவன் சிதறிப் போகப் பண்ணி பல மொழிகளையும் கொடுத்தார். (ஆதி 11:1-9). எனவே எந்த மொழி பேசினாலும் அவர்கள் தேவ சித்தத்திற்கு கீழ்படிந்திருந்தால் தேவனுக்கு உகந்தவர்களாக இருக்கிறார்கள் வித்தியாசமே இல்லை. (அப் 10 : 34, 35).

தேவனுடைய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் ஆதியில் இரட்சிக்கப்பட்டவர்கள் மூவாயிரம்பேர்கள். அவர்கள் அனைவரும் ஒரே மொழிக்காரர்கள் இல்லை. ஏறக் குறைய பதினேழு நாட்டுக்காரர்கள் வெவ்வேறு பாஷைக்காரர்களே. அவர்கள் அனைவரும் சபையில் ஒற்றுமையாக கள்ளங்கபடில்லாம் கிறிஸ்துவுக்குள் சந்தோஷமாக இருந்தார்கள். (அப் 2:9 - 11, 46, 47) சபையில் மொழி வேற்றுமை உணர்வுகள் கொஞ்சம் கூட இல்லாமல் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு பல உதாரணங்கள் வேதாகமத்தில் உள்ளன. ஆனால் நாமோ மாம்ச கிரியைகளுக்கு அடிமையாகி மொழியால் நாம் சகோதர, சகோதரிகளை பிரித்துப் பார்க்கிறோம். ஆனால் தேவன் சகல ஜாதிக்காரரையும்,

பாஷைக்காரரையும் கூட்டிச் சேர்த்திருக்கிறார். (ஏசா 66 : 18) எல்லா ஜாதிக்காரரும், எல்லா பாஷைக்காரரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக இருக்கிறார்கள் பரலோகத்திலும் வித்தியாசமின்றி இருக்கிறார்கள் (வெளி 7 : 9) பரலோகத்தின் சாயலே நாம் இன்று சபையில் காண்பிக்க வேண்டும். சபையில் இருக்கிறவர்களே நமக்கு முதன்மையான சகோதரரும், சகோதரியருமாகவும் இருக்கிறார்கள். (மத் 12 : 49, 50, 1. தீமோ 5 :1 - 2) தேவனுடைய வீட்டில் எல்லா ஜாதிக்காரரும், பாஷைக்காரரும் பந்தியிருப்பதுபோல நமது வீட்டிலும் எல்லா ஜாதிக்காரரும், பாஷைக்காரரும் பந்தியிருக்கும்படி அழைப்போம்.

**3. நிற வேற்றுமை**

இனத்தாலும், மொழியாலும் ஒன்றுபட்ட நாம் அனைவரும் நிறத்தாலும் கிறிஸ்துவுக்குள் ஒன்றுபட்டிருக்கிறோம். மலர்களைப் பார்க்கிறோம், மரங்களைப் பார்க்கிறோம் எத்தனையோ விதமான நிறங்கள். எல்லாம் அழகாக இருக்கின்றன. ஒன்றும் தள்ளப்படத்தக்கது இல்லை. இவைகளை சிருஷ்டித்தது தேவன். அவைகளைப் போலவே மனிதர்களையும் பலவிதமான நிறங்களில் சிருஷ்டித்திருக்கிறார். ஒருவரையும் தள்ளப்படத்தக்கவர்கள் இல்லை.

நிறவேற்றுமை உணர்வுகளால் யுத்தங்களும், சண்டைகளும் அயல்நாடுகளில் தீவிரமாக இருந்திருக்கின்றன. இதற்கு பின்பு சம அந்தஸ்து எல்லாருக்கும் அளிக்கப்பட்டிருந்தாலும் இன்னும் வெள்ளையர், கருப்பர் என்கிற பாகுபாடு இருக்கத்தான் செய்கின்றது. இப்படிபட்ட நிற வேற்றுமைகள் அடியோடு அழிய வேண்டுமெனில் தேவசித்தத்திற்கு முழுமையாகக் கீழ்படிந்து ஆகிக்குரியவர்களாக மாறும்போது மாற்றம் ஏற்படும்.

நம்மிடையே இன்று நிறவேற்றுமை திருமண விசயத்தில் பார்க்கிறோம். புறம்பான அழகையே முதன்மையாகத் தேடுகிறோம். கிறிஸ்துவுக்குள் இருக்கின்ற சகோதரியை தேடுவதில்லை. ஆதிகாலத்தில் தேவன் ஜலத்தினாலே இவ்வுலகை அழித்ததற்குக்கு முக்கியக் காரணம் தேவனுடைய பிள்ளைகள் புறம்பான அழகைத் தேடி தங்களுக்கு திருமணம் கொண்டதினாலே. (ஆதி 6 : 1-13) இந்த பெரும் அழிவு நமக்கு எச்சரிப்புக்காக எழுதப்பட்டிருக்கிறது. சௌந்தர்யம் என்பது அகத்தில் இருக்க வேண்டும். சாந்தமும், அமைதலுமுள்ள கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே பார்க்க வேண்டும். புறம்பான சௌந்தர்யம் வஞ்சனையுள்ளது. (நீதி 31 : 30) நோக்கமாகும். நிறத்தை விட நற்குணத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். அவளுடைய விலை முத்துக்களைக் காட்டிலும் விலை உயர்ந்தது. (நீதி 31: 10) அப்படிப்பட்டவளே தன் புருஷனுக்கு கிரீடமாக இருக்கிறாள். (நீதி 12 : 4) ஞானி சாலமோன் கண்டு, நேசித்தது கருப்பான அழகானப் பெண். (உன் 1 : 6, 8)திருமண விசயத்தில் நிறம் ஒரு வேற்றுமை உணர்வுகளை தூண்டாதபடி ஜாக்கிரதையாக இருப்போம். கிறிஸ்துவுக்குள் இனம், மொழி, நிறம் போன்ற வேறுபாடுகள் ஒன்றுமில்லை. நாம் அனைவரும் தேவனுடைய பிள்ளைகள் நம் அனைவருக்கும் ஒரே பிதா. எனவே ஒரு குடும்பமாக சபையில் உண்மையுடன் இருப்போம். நாம் இனி அந்நியரும், பரதேசிகளுமாக இல்லை.

**K. பாஸ்கர்,**
கோவில்பட்டி.

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

**HINDI** : Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049.

**ENGLISH** : Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049.

**TELUGU** : Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001.

**TAMIL** : Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084.

**MALAYALAM**: Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034.

**KANNADA** : Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004.

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, நவம்பர்
நவம்பர் THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

# :- அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

If undelivered Please return to:
The Editor phone: (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No. 27, KANGAYAM - 638 701

PRINTED MATTER

BOOK - POST